# குருவிற்கு ஓர் ஆத்ம சமர்ப்பணம்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருஉரு சிந்தித்து இருப்பல்தாமே''

எங்கும் பரவசம். எல்லோர் முகத்திலும் ஓர் ஆனந்தம். ஆம் கூட்டம் கூட்டமாக மக்கள் ஏதோ ஒரு இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்க, அவர்கள் மஞ்சள் உடை உடுத்தி, ஸ்ரீ கோவிந்தனுக்கு மிகவும் பிடித்த கோவிந்த நாமத்தை உச்சரித்தபடி செல்வதைப் பார்த்து, ஆர்வம் மேலீட்டால் தொடர்ந்து அவர்களுடன் சென்றால், நாம் வந்தடைந்தது ஸ்ரீ ஸ்ரீநிவாஸ நிகேதனம் என்ற புனித இடத்தை ஆஹா அங்கு நாம் கண்ட காட்சி நம்மை வியப்பிலும் பேரானந்தத்திலும் ஆட்கொள்கிறது. முதலில் ஸ்ரீபோக ஸ்ரீ நிவாஸ மூர்த்தி கம்பீரமாக நடுவில் வீற்றிருக்க, இருபுறமும் ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பஞ்சமுக சிவலிங்கம் அமைந்திருக்கும் ரதம் புறப்படும் நிலையில் தயாராக இருப்பதைக் காண்கிறோம். அதற்குப் பின்னால் மற்றொரு ரதத்தில் ஸ்ரீதேவி பூதேவி ஸமேதராய் ஸ்ரீ ஸ்ரீநிவாஸர் தமக்கே உரிய வசீகரப் புன்னகையுடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். இரு ரதத்தில் அலங்கரிக்கப்பட்ட பொருள் திருஉருவப் படங்கள், வாசகங்கள் பார்ப்போர் நெஞ்சை அள்ளுவதுபோல் அமைந்திருந்தது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தார்போல் ஸ்ரீ ஸ்வாமிகளும், குருமாதாவும் வெளியேவர கோவிந்த கோஷம் விண்ணைப் பிளந்தது. என்னே நாம் செய்த பெரும் பாக்கியம். ஆம் புரட்டாசி மாதம் 3வது சனிக்கிழமை ஸ்ரீ அம்ருதபுரி என்கிற ஸ்ரீ இராமானுஜ யோகவனத்தில் திருக்குடைகளை சமர்ப்பிக்க புறப்படும் நிலையில் உள்ள பாதயாத்திரையில் கலந்து கொண்ட பக்தர்கள், முன்னே ஸ்ரீ ஸ்வாமிகளும், ஸ்ரீ தாரா மாதாவும் வழிநடத்திச் செல்ல, பின்னே பஜனை பாடிக்கொண்டுவர, அவர்களுக்கு பின்னே காத்து ரட்சிக்க நான் இருக்கிறேன் என்று கட்டியம் கூறியபடி ரதத்தில் ஆனந்தமாக புறப்பாடு கண்டருளுகிறார் ஸ்ரீ போக ஸ்ரீ நிவாஸரும், ஸ்ரீ தேவி ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாளும்.

வழி நெடுக பக்தர்கள் ஆனந்தமாக பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் பஜனை செய்துவர, வழி நெடுகிலும் வந்து ஸேவிக்கும் பக்தர்களை ஆசீர்வதம் செய்து கொண்டு செல்கிறார் நம் குரு. பாத யாத்திரை தொடங்கி முடியும்வரை நம் ஸ்வாமிகள் அருளுரை ஆற்றியது பல்வேறு சித்தர்களைப் பற்றிய விளக்கமாக தகவல்கள், அவர்கள் தங்கள் குருவிடம் கொண்டிருந்த ஆத்ம விஸ்வாசம், நம்பிக்கை, அதைக்கண்டு அவர்களுடைய குரு ஆனந்தப்பட்டது, தவிர ஒவ்வொரு சித்தரையும் எதற்காக, எப்படி பூஜை செய்ய வேண்டும். காரணம் எல்லாவற்றையும் மிகவும் அழகான எளிய முறையில் உரையாற்றிக் கொண்டே வந்தார்கள்.

அப்போது, ஸ்ரீ போக ஸ்ரீ ஸ்ரீவாஸரின் தத்வார்த்தம் என்ன என்பதைக் கூறியபோது, ஸ்வாமிகள் ஆற்றிய உரையானது, போக்யங்களை அனுபவித்து, பக்தனுக்கு ஒரு ஆனந்தத்தைக் கொடுத்து பரவசப்படுத்துபவர் என்றும், போக ஸ்ரீ நிவாஸமூர்த்தி திருச்சானூரில் தாயார் ஸன்னதியில் உற்சவர் பக்கத்தில் இருந்தார் என்றும், 1983 ஆம் ஆண்டு திரு. முனுசாமி நாயுடு என்றும் Peshkar, போக ஸ்ரீ ஸ்ரீநிவாஸர் எல்லோருக்கும் போகங்களைக் கொடுத்து, குடும்பத்தில் க்ஷேமத்தை ஏற்படுத்தவும், மக்களுக்கு நன்மை வழங்கவும் ஸ்தாபிதம் செய்யப்பட்டதாகக் கூறினார். போக ஸ்ரீநிவாஸ மூர்த்தி, திருமலையில் பிரதிஷ்டை செய்த பிறகுதான், திருமலையில் வருமானம் கோடிக்கணக்காகப் பெருகியது என்று கூறிய ஸ்ரீ ஸ்வாமிகள், நம் எல்லோருக்கும் அதே முறையில் எல்லாவித போகங்களையும் அள்ளிக்கொடுக் கவும், நம் இல்லங்களில் சுப விசேஷங்கள் நல்லபடியாக நடக்கவும், எல்லோர் குடும்பங்களில் க்ஷேமம் உண்டாகவும், நம் சந்ததியினர் எல்லா வளங்களும் பெற்று வாழ்ந்திடவும், மொத்தத்தில், நம் எல்லோருடைய இல்லங்களிலும் மகிழ்ச்சி ஏற்படவும், இந்த வருட பாத யாத்திரையில் ஸ்ரீ போக ஸ்ரீ ஸ்ரீநிவாஸர் புறப்பாடு கண்டருளுகிறார். நல்லறமாக்க, தம்பதிகள் ஒற்றுமையாய் வாழ ஆசிர்வாதம் செய்து கொண்டிருப்பதாகவும் கூறினார்.

நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். சென்ற வருடம் ஸ்ரீ சீதா லட்சுமண, ஹனுமத் ஸமேதராய் ஸ்ரீ இராமசந்திர மூர்த்தி, ஏகபத்தினி விரதத்தையும், அண்ணன், தம்பிகளுக்கு இடையே உள்ள ஒற்றுமை பற்றியும் உணர்த்த நம்முடன்

புறப்பாடு கண்டருளினார். இந்த வருடம் போக ஸ்ரீநிவாஸர், நமக்கு வேண்டிய போகங்களை அள்ளிக்கொடுக்க நம்முடன் வருகிறார் என்றால் நாம் பெற்ற பாக்கியம்தான் என்னே! இவற்றிற்கெல்லாம் முக்கிய காரண கர்த்தாவாகிய நம் குரு, தம் கால் வலியையும் பொருட்படுத்தாமல், நமக்காக குரு மாதாவும் அவருடன் ஈடுகொடுத்து நம்மை வழிநடத்திச் சென்றார்கள். இது எப்பேற்பட்ட பாக்கியம். முடிவில் 5ம் தேதி காலை படாளம் கூட்டு ரோடிலிருந்து வழி நெடுக கோவிந்த கோஷம் போடும் பக்தர்கள் கூட்டம் ஒருபுறம், பஜனை, நாட்டியம் என்று நம்மை மறந்த நிலையில் ஆனந்தமாக குடைகளை சமர்ப்பித்தோம். பாதயாத்திரை முழுக்க நம் கூடவே இருந்து நம்மைக் காத்த நம் குரு, குரு மாதாவிற்கு, பாதயாத்திரை மேற்கொண்ட பக்தர்கள் சார்பாக அவர்களை திருவடிகளில் விழுந்து ஸேவித்து நடக்க முடியுமா? நம்மால் என்று எண்ணி அவரிடம் கூறியபோது வாத்ஸல்யத்துடன் ‘நீ வாம்மா பெருமாள் நடத்திண்டு வந்திடுவான்’ என்று கூறிய மகா ஞானி அல்லவா நம் குரு. சரி இந்தப் பாதயாத்திரை கடைசியில் வெய்யிலின் தாக்கத்தால் சிறிது கடினமாக இருந்தது என்று நினைத்தவர்கள், இந்தப் பாதயாத்திரை முடிவில், மீண்டும் அடுத்த பாதயாத்திரை, வர தேகபலத்தைக் கொடு கோவிந்தா என்றுதான் எண்ணுகிறார்களே தவிர இத்துடன் போதும் என்று எண்ணுவது இல்லை. அது அந்த சக்தியால், நம் ஒவ்வொருவருடைய ஆத்ம குருவாக விளங்கும் நம் ஸ்வாமிகள்தான். ஸ்ரீ குரு, குருமாதா பாதார விந்தங்களில், நம் எல்லோருடைய நன்றியையும் சமர்ப்பித்து, நம் எல்லோருக்கும் இந்த பாதயாத்திரை பாக்கியத்தை தொடர்ந்து கொடுத்து ஆசீர்வதிக்குமாறு விண்ணப்பித்து, தன்னலம் கருதாது அயராது நமக்காக எந்த நொடியும் இடைவிடாமல் உழைக்கும் நம் குரு, குருமாதா அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ, ஸ்ரீ மதுரவல்லலி நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மூர்த்தியை மனதார வேண்டிக்கொண்டு, பாதயாத்திரையாய் வந்த பக்தர்கள் எல்லோருடைய நன்றியையும் அவர்கள் திருவடியில் ஸமர்ப்பிக்றேன்.

ஜய் ஸீதாராம்!! ஜய் தாராமாதே!!!

அனந்தகோடி நமஸ்காரங்களுடன்

**ஸ்ரீமதி ரமா ஸ்ரீநிவாஸன்**

அடையார்